# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை—600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் 33/2019 நாள் 23.12.2019

### சாதாரண உள்ளாட்சித் தேர்தல்—2019

தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் நியாயமாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முதற்கட்ட வாக்குப்பதிவு 27.12.2019ல் நடைபெறவுள்ளதால், அப்பகுதியில் தேர்தல் பிரசாரம் 25.12.2019 மாலை 05.00 மணியுடனும், இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு 30.12.2019ல் நடைபெறவுள்ளதால் அப்பகுதியில் தேர்தல் பிரசாரம் 28.12.2019 மாலை 05.00 மணியுடனும் முடிவுக்கு வருகிறது.

தேர்தல் பிரசாரம் முடிவிற்கு வந்த பின்னர், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பில் வாக்காளர்கள் அல்லாத, வெளியிலிருந்து அழைத்து வரப்படும் அரசியல் கட்சி பிரமுகர்கள் / கட்சித் தொண்டர்கள் அனைவரும் அந்த உள்ளாட்சி பகுதியில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என்றும், அவ்வாறு வெளியேறாதவர்கள் தேர்தல் நடத்தை விதிகளை மீறியதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தினால் தெரிவிக்கப்படுகிறது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

மக்கள் தொடர்பு அலுவலர்